[2022 மார்ச் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன் அவர்கள்.

திரு. சீ. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

26—

சாலையை அகலப்படுத்துதல்

***7073—திரு. J.L. ஈஸ்வரப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாப்பாக்கம் கூட்டு ரோடு முதல் சின்ன உப்புப்பேட்டை வரை உள்ள சாலையை அகலப்படுத்தி, இருவழிச் சாலையாக மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விளாப்பாக்கம் சாலை 2.80 கிலோ மீட்டர் நீளமுடைய சாலை. ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், 2017–2018–ன்கீழ் மேம்பாடு செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. விளாப்பாக்கம்–சின்ன உப்புப்பேட்டை சாலை 1.6 கிலோ மீட்டர் நீளமுடைய சாலை. கடந்த 2020–2021–ல் திட்டம் சாரா பணிகளின்கீழ் ஓடுதளம் பழுதுபார்க்கப்பட்டு, இப்போது அந்தச் சாலை நல்ல நிலையில் உள்ளது.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. J.L. ஈஸ்வரப்பன்: மாண்புமிகு முதலமைச்சருக்கு வணக்கம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2022 மார்ச் 21]

விளாப்பாக்கம் பேரூராட்சியில் சுமார் 10,000 மக்கள் வசிக்கிறார்கள். அந்தப் பேரூராட்சியைச் சுற்றியுள்ள 15 ஊராட்சிகளைச் சேர்ந்த மக்கள் ஆரம்ப சுகாதார நிலையத்தில்தான் மருத்துவ வசதி பெற்று வருகிறார்கள். மேலும், ஆம்புலன்ஸ் வசதி, அறுவடை இயந்திரம், கரும்பு லாரி போன்றவை அந்தச் சாலையில் வந்து செல்வது மிகவும் சிரமமாக இருக்கின்றது. அந்த சுற்று வட்டாரத்தில் உள்ள மாணவர்களும் அங்குள்ள மேல்நிலைப் பள்ளியில்தான் படிக்கின்றார்கள். பிரசவத்திற்கு வரும் தாய்மார்கள், விவசாயிகள், மாணவர்கள், பொதுமக்கள் போன்றவர்கள் சிரமமின்றி பயணம் செய்ய விளாப்பாக்கம் கூட்டு ரோடு முதல் சின்ன உப்புப்பேட்டை வரை உள்ள சாலையை அகலப்படுத்தி, இருவழிச் சாலையாக இந்த வருடத்திலேயே அமைத்துத் தர வேண்டும். ஆற்காடு முதல் விழுப்புரம் வரை உள்ள சாலையையும் அகலப்படுத்தி, நான்குவழிச் சாலையாக மாற்றுவதற்கு Tamil Nadu Road Sector Project *மூலம்* Detailed Project Report *தயார் செய்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த வருடத்திலேயே பணியைத் துவக்க முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக மிகுந்த பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாப்பாக்கம் கூட்டுச் சாலை முதல் சின்ன உப்புப்பேட்டை சாலை வரை உள்ள சாலைகள்,* ODR, *அதாவது இதர மாவட்ட சாலைகளாகும். விளாப்பாக்கம் சாலை 2.80 கிலோ மீட்டர் நீளம் உடையது. இதன் ஓடுதளம் 3.75 மீட்டராகும். விளாப்பாக்கம் முதல் சின்ன உப்புப்பேட்டை வரை உள்ள சாலை 1.60 கிலோ மீட்டர் நீளமுடையது. இந்தச் சாலையின் ஓடுதளம் 3.75 மீட்டராகும். ஆக, இந்தச் சாலை மொத்தம் 4.40 கிலோ மீட்டர் நீளமுடைய சாலையாகும். 2014 ஆம் ஆண்டு வாகன போக்குவரத்துக் கணக்கெடுப்பின்படி; போக்குவரத்து செறிவு 2,986; அதாவது* PCU–Passenger Car Unit *என்கிற அந்த அளவுகோலை எடுத்துக்கொண்டால், 3,000–க்குமேல் 6,000–க்குள் இருந்தால்தான் இடைவழிச் சாலையை அங்கு அமைக்க முடியும். அதாவது, 5.50 மீட்டர் அகலத்தில்தான்*

சாலையை அமைக்க முடியும். அந்த அடிப்படையில்தான் 6,000 PCU–க்குமேல் இருந்தால் மட்டும்தான் இருவழிச் சாலை அமைக்க இயலும். இந்தச் சாலையைப் பொறுத்தவரையில், ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்படி, 2018 ஆம் ஆண்டில்தான் சாலை அமைக்கப்பட்டுள்ளது. ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்தால்தான் சாலையை மீண்டும் நாம் போட முடியும். ஒரு சாலை அமைத்தோமென்றால், மறுபடியும் சாலை அமைப்பதற்கு 5 வருட கால அவகாசம் இருக்கிறது. எனவே, 2017–2018 ஆம் ஆண்டில் போடப்பட்ட சாலை என்பதால், இன்னும் 5 ஆண்டுக்காலம் நிறைவடையவில்லை. ஐந்து ஆண்டுக்காலம் நிறைவடைந்த பின்னர்தான் அந்தச் சாலையை மேம்படுத்த இயலும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருவழிச் சாலையை அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தத் துறையின் ஆய்வின்போது ஒருவழிச் சாலைகளையெல்லாம் இருவழிச் சாலைகளாகவும், இருவழிச் சாலைகளையெல்லாம் நான்குவழிச் சாலைகளாகவும் மாற்றுவதற்கான ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி, நிதியையும் ஒதுக்கித் தந்துள்ளார்கள். அதன் அடிப்படையில், பல மாவட்டங்களில், பல சாலைகளை, அதாவது இருவழிச் சாலைகளையெல்லாம் நான்குவழிச் சாலைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. அதன் அடிப்படையில், பள்ளி மாணவர்கள் எல்லாம் செல்கின்ற சாலை என்பதால், இந்தச் சாலைக்கு முன்னுரிமை தந்து, அடுத்த ஆண்டில் ஒருவழிச் சாலையை, இருவழிச் சாலையாக்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. J.L. ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 7 ஆண்டுக்காலமாக ஆற்காடு புறவழிச்சாலை பணி நிலுவையில் இருந்தது. நம்முடைய தலைவர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர்தான், வேப்பூர் கிராமத்திற்கு 30–9–2021 அன்று 2 கோடியே 87 இலட்சம் ரூபாயும், தாஜ்புரா கிராமத்திற்கு 30–6–2021 அன்று 8 கோடியே

2022 மார்ச் 21]

37 இலட்சம் ரூபாயும் நிலத்தை கொடுத்த நல் உள்ளங்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்தப் புறவழிச்சாலைப் பணியை வெகு விரைவில் துவக்க மாண்புமிகு முதலமைச்சர் வழியில் செயல்படும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, ஆற்காடு சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக மிகுந்த அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஈஸ்வரப்பன் அவர்கள் குறிப்பிடும் சாலைக்கு இந்த ஆண்டே முன்னுரிமை அளித்து, துறைமூலம் ஆய்வு செய்து, அந்தச் சாலை அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். கோவை வடக்கு தொகுதிக்குட்பட்ட தடாகம்—லாலி ரோடு சந்திப்பு மிகவும் நெருக்கடிக்குள்ளாகி இருக்கிறது. வேளாண்மைப் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், அரசு பொறியியல் கல்லூரி ஆகிய மூன்றும் அங்கு உள்ளது. அந்தச் சாலையை வாகனங்கள் கடக்க சுமார் ஒரு மணி நேரம் ஆகின்றது. அந்த இடத்தில் உயர்மட்டப் பாலம் ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டித் தருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—40

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியைப் பொறுத்த அளவில், பல்வேறு சாலைகள் மாநகராட்சிக்குச் சொந்தமானவை.*

சில சாலைகள்தான் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமானவை. ஆனாலும்கூட, Mayor தேர்தலுக்குப் பின்னர் அந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. செந்தில் பாலாஜி அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அணுகி, அங்கு நெடுஞ்சாலைத் துறை மூலமாக சில சாலைகளை எடுத்து முழுமையாகச் சாலை அமைக்க வேண்டுமென கோரிக்கை வைத்தார். எங்கெங்கெல்லாம் போக்குவரத்து நெருக்கடி அதிகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் பாலம் கட்ட முடியுமா என்று ஆய்வு செய்து, திட்ட அறிக்கையைத் தாருங்கள் என்றும், அதற்கென்று தனியாக நிதி ஒதுக்குவதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை நேரடியாக அழைத்துப் பேசினார்கள். அந்த அடிப்படையில், அங்கிருக்கக்கூடிய நெடுஞ்சாலைத் துறையின் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களிடத்திலே சொல்லி, கோவை மாநகராட்சியின் எந்தெந்த சாலைகளையெல்லாம் நெடுஞ்சாலைத் துறையின்கீழ் எடுத்துக்கொள்ளலாம், அப்படி எடுத்துக்கொள்ள வேண்டுமானால் அது நகராட்சி சாலையாக இருந்தால், தற்போது மக்கள் பிரதிநிதிகள் வந்துள்ளதால் அதற்கு மாநகராட்சியில் ஒரு தீர்மானம் போட வேண்டும். எனவே, அந்த அடிப்படையில், போக்குவரத்து நெருக்கடியுள்ள சாலைகளை அடையாளம் கண்டு, தீர்மானம் போட்டு, அந்தச் சாலைகளுக்கெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரிமை அளித்து நிதி ஒதுக்குகிறேன் என்று சொல்லியிருக்கின்ற காரணத்தினால், நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்வதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அதற்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். திருவள்ளூர் தொகுதி மக்களின் நீண்டகால குறையாக இருக்கக்கூடிய திருவள்ளூர் bypass சாலைப் பணித் திட்டம் கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இதே அவையில் அறிவிக்கப்பட்டு, இப்போதுதான் Detailed Project Report தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆய்வின்போதுகூட நான் மாவட்ட ஆட்சியரிடத்தில் அதுபற்றிக் கேட்டபோது land acquisition–க்காக proposal வந்திருக்கின்றது என்று சொன்னார்கள்.

2022 மார்ச் 21]

இதனை எந்த நேரத்தில் எப்போது ஆரம்பிப்பீர்கள் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.ஜி.ஆர். அவர்கள் குறிப்பிட்டதைப்போல, திருவள்ளூர்* bypass *சாலைத் திட்டம் கிடப்பிலே கிடந்தது. அதற்குக் காரணம், அங்கு சாலை போடுவதா, இல்லையா என்றும், அந்தப் பாலத்தைக் கட்டுவதா, இல்லையா என்றும் பத்தாண்டுக் காலம் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்ததுதான். இப்போதுதான் வழக்கு முடிவுக்கு வந்துள்ளது. எனவே, நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், அந்த* bypass *சாலையை அமைக்க வேண்டும் என்று அரசு முடிவு செய்த காரணத்தினால்தான், தற்போது* Detailed Project Report *தயார் செய்கிறார்கள். ஆகவே, அந்த* bypass *சாலையைப் போடுவதற்கு அரசாங்கம் தயாராகிவிட்டது என்றுதான் அர்த்தம். எனவே,* DPR *பணிகள் முடிந்தவுடனேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று அதற்கு நிதி ஒதுக்கி அந்த* bypass *சாலை அமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

27—

தொழிற்பூங்கா

***17837—திரு. மு. ஜெகன் மூர்த்தி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வைத்திணான்குப்பம் தொகுதியில் தொழிற்பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*